உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௬ { விக்கிரம—புரட்டாசி } மலர் ௬


| | | |
|---|---|---|
| க. | பொழிற்றொண்டர் கருத்துரைகள் | 203 |
| உ. | திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்<br>உயர் திரு. சுவாமி விபுலாநந்தர் | 207 |
| ௩. | இளமை நினைவுகள்<br>திரு. ச. கு. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ. | 214 |
| ௪. | காளிங்கராயப் பெயரினர்<br>திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் | 219 |
| ௫. | திருக் கடம்பூர்ச் சிவன் கோயில்களின் கல்வெட்டுக்கள்<br>திரு. வை. சுந்தரேச வாண்டையார் | 230 |
| ௬. | சுவடி மதிப்பு<br>பொழிற்றொண்டர் | 234 |
| ௭. | இலங்கை, வீரகேசரி | 235 |
| ௮. | காட்சி யளவை<br>திரு. த. இராமநாதபிள்ளை, பி. ஏ. (Lond.) | 238 |
| ௯. | பழநி ஊர்க்கோயில் குடமுழுக்கு<br>திரு. S. அளகிரிசாமி செட்டி | 241 |
| ௰. | நன்கொடைகள்<br>பொழிற்றொண்டர் | 242 |


பொழிற்றொண்டர்:
செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் யசு | விக்கிரம—புரட்டாசி | மலர் சூ |
| --- | --- | --- |

உ

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்

### கலைச் சொல் லாக்கம்

சென்னை மாகாண அரசியலாரது கலைச்சொல் லாக்க முயற்சியைக் குறித்துச் செந்தமிழ்ச் செல்வியும், தமிழ்ப் பொழில் ஆடி மலரில் வெளியிட்டுள்ள, எம் கருத்தினைப் பெரும்பாலும் ஒட்டி மொழிந்திருப்பதைப் படித்து யாம் மகிழ்கின்றோம்.

செல்வியின் ஆடி மலரில் எழுதியுள்ள ஆராய்ச்சி யுரையின் வடித்த கருத்தாகக் காட்டியுள்ள பகுதியைக் கீழே தருகின்றோம்.

'தூய் தமிழில் அமையாத எத்தகைய சொல் லாக்கங்களையும் சிறந்த தமிழறிஞர்கள் ஏற்றுப் போற்றாராதலின், இதற்குமுன் வேறு எந் நலங்களும் எதிர் நிற்பன வல்ல. தூய் தமிழோடு அமையுமாயின் மட்டுமே பிற நலங்களும் ஏற்றுக்கொள்ளுதற் குரியன.'

இதுவே எம் கருத்து மாகும்; தமிழர் ஒவ்வொருவர் கருத்தாயும் இருக்கவேண்டும். இதனையே அரசியலாரிடம் பின்னும் வற்புறுத்துகின்றோம்.

ஓ ஓ ஓ ஓ

நம் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளையும், சங்க வாணாள் உறுப்பினரும், பெரு நிலக் கிழவருமாகிய நச்சாந்துப் பட்டித் திரு. பே. ராம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியாரும், திரு. அ. கணபதி பிள்ளையும் இலங்கைக்குச் சென்றிருந்தார்கள்; பத்து நாட்கள் அங்குள்ள பல இடங்களையும் பார்த்துத் திரும்பி வந்தார்கள்.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

அங்குள்ள தமிழ்மக்களெல்லாம், தமிழ்மொழியிடத்தும், தமிழ்ப் புலவர்களிடத்தும், பேரன்புடையவர்களாக இருத்தலை அவர்கள் கண்டார்கள். இளைஞர்களில் பலர், தமிழ் கற்கும் ஆர்வத்தோடு, இங்கிருந்து சில ஆசிரியர்களை அழைத்துச் சென்று, அவரவர்களுக்குக் கிடைக்கும் ஒய்வு நேரங்களில், தமிழிலக்கியங்களைப் பயில்வதைப் பெரிதும் பாராட்டினார்கள். இவ்வாறு பயிலும் இளைஞர்கள் யாவரும், பலபல தொழில்களில் ஈடுபட்டவர்களாகவும், இலக்கியத்தைத், தொழிலுக்காக இல்லாமல், தங்கள் வாழ்க்கை பண்படுவதற்காகவே படிக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்து, அத்தகைய முறை நம் நாட்டிலும் விரைவில் பரவவேண்டுமென்று விரும்புகிறார்கள். தமிழ் கற்க வேண்டுமென்று எண்ணுவார் தொகைக்கு ஏற்ப அங்கு ஆசிரியர்கள் இல்லாத குறையும் புலப்பட்டதாம்.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

பழந் தமிழ்த் தொண்டராகிய சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் மகனார் திரு. பிரான்ஸிஸ் கிங்க்ஸ்பரி அவர்களுடன் நமது அன்பர்கள் அளவளாவித், தமிழ், தமிழ்ப் புலவர் தொடர்பான பல செய்திகளையும் தெரிந்து வந்தார்கள். சென்ற நூற்றாண்டில், வட்டுக்கோட்டைக் கிறிஸ்தவர் கழகத்தில் (Vattukkottai Seminary) பல மேனாட்டுப் பாதிரிமார்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டையும், எழுப்பிய கலை நல வேட்கையையும் பற்றி அவர்கள் தெளிவாகக் கூறினார்களாம். அப்போது அக் கழகத்தில் எழுந்த அறிவு நூல்களின் (Sciences) தமிழ் மொழி பெயர்ப்பு பலவெனத் தெரிகிறதாம். சித்தாந்த சாத்திரத்தை மேனாட்டுக்கு முதன் முதல் நன்கு தெரிவித்தவர் அக்கழகப் பாதிரிகளில் ஒருவரே யாவராம்.

ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

பல்கலைக் கழகத் தமிழாசிரியர், பேரறிஞர் (Dr.) கணபதி பிள்ளை அவர்களைக் கண்டு நமது அன்பர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது, இந்த ஆண்டு முதல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சிறப்புத் தேர்வு (Tamil Honours) அமைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் தெரிவித்ததோடு, நம்மவர்கள் பலரும் இவ் வமயத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டு மென்பதையும் தெரிவித்தார்களாம். தமிழ் மக்களுடைய ஆர்வமும் முயற்சியும் பெருகுமானால், உலக மொழிகளில் தமிழ் ஓர் தனிச் சிறப்படைவதற்கு ஏற்றநிலை இப்பொழுது மேல் நாட்டில் உள்ளமையையும் தெரிவித்தார்களாம். மேல் நாட்டில் தமிழ் பரவ வேண்டிய அளவு பரவாமைக்குத் தமிழ் மக்களது ஊக்கக் குறைவும், அங்கு மாணவர்களாகவோ வேறு வகையாகவோ செல்லும் தமிழர்கள் தாய்மொழி அன்பற்றவர்களாக இருத்தலுமே பொருட்டாகத் தெரிகிறது.

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

மேல் நாட்டு நூல் நிலையங்களில் தமிழிலக்கியம் பயில்வதற்கு அமைந்துள்ள கருவிகள் அளவு நம் நாட்டில் இல்லையென்பதைப் பிள்ளையவர்கள் தெரிவித்ததைக் குறிப்பிடத் தக்கதாகும்.

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

தமிழ் இலக்கியக் கதைகள் பலவற்றை எளிய நடையில் எழுதி, இலங்கையில் தொழிலாளிகளாக வேலை செய்யும் தமிழ் மக்களிடம் பரவச் செய்வோமானால், பெரும் பயன் விளையும் எனவும்; இவ் வேழை மக்களெல்லாம் இயற்கையாகவே கடவுட் பற்று நிரம்பியவர்களாக உள்ளமையின், தமிழ் மொழியிலுள்ள அருள் நூல்களில் எளிய பகுதிகளைத் திரட்டிச் சிறு சுவடிகளாக வெளியிடுவதும் தமிழ் நலத்துக்கு இன்றியமையாததெனவும் நம தன்பர்கள் கருதுகிறார்கள்.

ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

நமது அன்பர்களோடு உடனிருந்து, பல இடங்களுக்கும் அழைத்துச்சென்று, அவர்களைப் பலருக்கும் அறிமுகப் படுத்திய, இலங்கை இந்தியர் குழுத் தலைவர் திரு. வ. ராம. இலக்குமணச் செட்டியார் அவர்களது பேரன்பும், தமிழ்ப் பற்றும் மிகவும் பாராட்டத் தக்கது. நம் அன்பர்களை வரவேற்றுச் சிறப்பித்த, திரு. நடராசச் செட்டியார், திரு. சுப்பையாச் செட்டியார், திரு. சாமிநாதன் செட்டியார், திரு. வள்ளியப்பச் செட்டியார், திரு. எஸ். சோமசுந்தரஞ் செட்டியார், திரு. சொக்கலிங்கஞ் செட்டியார், திரு. அண்ணாமலைச் செட்டியார், வீரகேசரி ஆசிரியர் திரு. ஈசுவர ஐயர், தினகரன் ஆசிரியர் திரு. என். எஸ். கிருட்டிணையர், திரு. பிரான்ஸிஸ் கிங்க்ஸ்பரி, பேரறிஞர் க. கணபதிபிள்ளை, திரு. கதிர்காமர் முதலியவர்கட்கும்; கொழும்பில் நம் அன்பர்கட்கு வேண்டும் வசதிகளைக் குறைவற அமைத்துத் தந்துதவிய, வீரகேசரி உரிமையாளர் திரு. ப. பெரி. சுப்பிரமணியச் செட்டியார் அவர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

நமது அன்பர்களது இலங்கைச் செலவைக் குறித்து இலங்கையிலுள்ள ஒரு நாள் தாள் குறிப்பிடுவதைப் பிறிதோரிடத்தில் காண்க.

# திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும்

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்,
மாயாவதி, அல்மோரா, இமாலயம்.

ஆன்றோருடைய செய்யுட்களில் அமைந்த ஒப்புமைப் பகுதிகள், அவரது திருவுள்ளக் கருத்தினை யாம் ஒருவாறு அறிந்து கொள்ளுதற்குச் சிறந்த கருவி ஆகின்றன.

திருவள்ளுவ நாயனாரது கடவுள் வாழ்த்தும் ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த, 'புவம் வளி கனல் புனல்' என்னும் முதற்குறிப்பினை யுடைய, திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும் சிற்சில ஒப்புமைப் பகுதிகளோடு திகழ்கின்றன.

கடவுள் வாழ்த்து 9-ஆம் குறள் வெண்பாவிலே, 'எண்குணத்தான் தாளை வணங்காத் தலைகோள் இல் பொறியிற் குணம் இல' எனக் கூறப்பட்டது. எண் குணங்களாவன யாவை என்னும் வினாவிற்கு ஆசிரியர் பரிமேலழகர் சைவ நூன் முடிபு, ஆருகத நூன் முடிபு, அணிமா முதலிய எண் சித்திகள் என்னும் இவற்றினை எடுத்துக் காட்டுகின்றார். முதற்குறள் முதல் எட்டாங்குறள் வரையும் நாயனார் கூறிய எண் குணங்களே ஒன்பதாங் குறளினுள் அநுவதிக்கப்பட்டன எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். (1) ஆதி பகவன் (2) வாலறிவன் (3) மலர்மிசை யேகினான் (4) வேண்டுதல் வேண்டாமை யிலான் (5) இறைவன் (6) பொறிவாயி லைந்தவித்தான் (7) தனக்குவமை யில்லாதான் (8) அறவாழி யந்தணன் என்னும் எட்டுத் திருப் பெயர்களும் முதல் எட்டுக் குறள் வெண்பாக்களிலுங் கூறப்பட்டன. இவை,

> பவமின்மை யிறவின்மை பற்றின்மை பெயரின்மை
> உவமையின்மை யொருவினை யின்மை
> குறைவிலறிவுடைமை கோத்திர மின்மையென்
> றிறைவனிடத்தி லெண்குண மிவையே.

எனப் பிங்கலந்தையுட் கூறப்பட்ட எண் குணங்களையும், தன்

வயத்த னாதல், தூய வுடம்பின னாதல், இயற்கை யுணர்வின னாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், பேரரு ளுடைமை, முடிவிலாற்ற லுடைமை, வரம்பி லின்ப முடைமை எனச் சைவாகமங்களுட் கூறப்பட்ட எண் குணத் தினையும் ஒருவாறு குறித்து நின்றன வென்பதை உய்த் துணர்ந்து கொள்ளுதல் கூடும்.

இனி, 2-ஆம் குறள் முதல் 8-ஆம் குறள் வரையு முள்ள ஏழும் கடவுளை வழிபடுவார் எய்துதற்குரிய பயன் இவையென வகுத்துக் கூறுகின்றன. அவை வருமாறு:

(உ) வாலறிவனது நற்றாளினைத் தொழுதார்
கற்றதனா லாய பயனை எய்துவர்.

(ங) மலர்மிசை யேகினானது மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

(ச) வேண்டுதல் வேண்டாமை யிலானது அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில.

(ரு) இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார்மாட்டு
இருள்சேர் இருவினையுஞ் சேரா.

(சு) பொறிவாயி லைந்தவித்தானது பொய்தீ ரொழுக்கநெறி நின்றார்
நீடு வாழ்வார்.

(எ) தனக் குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க்கு
மனக்கவலை மாற்றல் எளிது.

(அ) அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க்குப்
பிற ஆழி நீந்தல் எளிது.

ஆளுடைய பிள்ளையாரது திருப்பதிகத்தினுள்ளே,

(க) பதுமநன் மலரது மருவிய சிவனது சிவபுரம் நினைபவர்
செழுநில னில் நிலைபெறுவர்.

(உ) அரியுரு வியல்பர னுறைபதி சிலைமலி மதிள்சிவ புரநினை பவர்
திரு மகளோடு திகழ்வர்.

(௩) முழுவதும் அழிவகை நினைவொடு முதலுரு வியல்பா
னுறைபதி செழுமணி யணிசிவ புரநகர் தொழுமவர்
புகழ்மிகும் உலகிலே.

(௪) நியதமும் வழிபடும் அடியவர் குறைவில பதம்அணை தர அருள்
குணமுடை யிறையுறை வனபதி சிறைபுன லமர்சிவ புர
மது நினைபவர்
செயமகள் தலைவரே.

(௫) நியதமும் உணர்பவர் தனதெழி லுருவது கொடுஅடை தகு
பர னுறைவது நகர்மதில் கணமரு வியசிவ புரம்நினை பவர்
கலைமகள் தரநிகழ்வர்.

(௬) அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையா னுறைபதி
திருவளர் சிவபுரம் நினைபவர்
திகழ்குலன் நிலனிடை நிகழும்.

(௭) எயிறதன் நுதிமிசை இதமமர் புவியது நிறுவிய எழிலரி வழி
பட அருள்செய்த பதமுடை யவனமர் சிவபுரம் நினைபவர்
நிலவுவர் படியிலே.

(௮) நிசிசரன் முடியுடை தரவொரு விரல்பணி கொளுமவ னுறை
பதி திசைமலி சிவபுரம் நினைபவர்
செழு நிலனினில் நிகழ்வுடையர்.

(௯) அரி அயனொடும் அறிவரி யதோரழல்........வெளிபடு மவ
னகர் திடமலி பொழிலெழில் சிவபுரம்நினை பவர்
வழிபுவி திகழும்.

(௰) தமதுகை உணலுடை யவருணர் வருபா னுறைதரு பதியுல
கினில்நல கணமரு வியசிவ புரம் நினை பவர்
எழிலுரு வுடையர்.

எனப் பத்துப் பாடல்களினுள்ளே பத்துப் பேறுகள் கூறப்பட்டன. பதினோராம் பாடலினுள் இவற்றைத் தொகுத்து, 'ஒருபதும் நவில்பவர் நிகழ்குலம், நிலம், நிறை, திரு, உரு, நிகரிலகொடை, மிகுசயமகள், புகழ், புவிவளர் வழி, அடிமையின் மிகை, புணர்தர நலம் மிகுவர்' எனத் திருக்கடைக் காப்புக் கூறப்பட்டது.

பத்துச் செய்யுட்களும் பத்து வகைத் தியானங்களையும் அவற்றினால் எய்தும் பத்துப் பேற்றினையுங் குறிப்பன.

(க) ஐம்பெரும்பூதங்கள், வேதாகமங்கள், முக்குணவயப் பட்ட தேவர் முதலிய உயிர்கள் என்னும் இவை தோன்றுதல் வேண்டுமென்னும் நினைவினோடு தாமரை மலராசனத்திலிருந்து யோகு புரியும் பிரமதேவனாகிய சிவன் **தியான மூர்த்தி**; நில வுலகில் நீண்டகாலம் உயிர்வாழ்தல் **பயன்**. திருக்கடைக் காப்பி னுள்ளே இப்பேறு 'அடிமையின் மிகை புணர்தர' எனக் குறிப்பிடப்பட்டது.

(உ) மலை பலவுடைய பூவுலகிலே, வேதநெறி நிற்கும் மாந் தரும் தேவர்முதல் ஏனையோரும் நிலைபெறும் வண்ணம் அவ வைக் காக்குங் கருத்தோடு அலைகடல் நடுவிலே யோக நித்திரை புரிகின்ற விஷ்ணு மூர்த்தியாகிய சிவன் **தியானமூர்த்தி**; செல் வத்தை யடைதல் **பயன்**.

(ங) தேவர் மக்கள் முதலிய உயிர்கள் செய்வினை தீர்ந்த எல்லையிலே, அவ் வினைப் பயனை அடையும் வண்ணம் உடலினை நீத்தல் வேண்டுமென்னும் அருட் குறிப்போடு யோகு புரிகின்ற அரன் **தியானமூர்த்தி**; புகழினை யடைதல் **பயன்**. புகழினை விழைந்தோர் சாதற் கஞ்சாரென்பது, 'உயிர்நீப்பர் மானம் வரின்' என்பதனாற் பெறப்பட்டது.

(ச) சந்தனம், மலர், நறும் புகை, விளக்கு, நன்னீர் இவற் றைக்கொண்டு தினமும் வழிபாடியற்றும் கிரியையாளர் சாமீப முத்தியை யடையும் பொருட்டு அருள்புரியும் இறைவன் **தியான மூர்த்தி**; வெற்றி யடைதல் **பயன்**.

(ரு) காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட அறுபகையையும் வென்று, ஐம்பொறி களையும் அடக்கிப், பிராண வாயுவை நெறிப்படுத்திச், சித்த விருத்தி யற்று யோகஞ் செய்வோர் சாரூபத்தையடையும்

வண்ணம் அருள்புரியும் பரன் **தியானமூர்த்தி**; கல்வியறிவு நிறைதல் **பயன்**. திருக்கடைக் காப்பினுள்ளே இப்பேறு 'நிறை' எனக் குறிப்பிடப்பட்டது.

(சு) உலகு புகழ வேதமுதற் கலைகள் கூறிய தவநெறியினிற்போர் திருவடியை யடையும் வண்ணம் அருள் புரிகின்ற அரன் **தியானமூர்த்தி**; குலம் நிலைபெறுதல் **பயன்**. 'உவந்தாரை யாக்கல்' தவமுடையாரது ஆற்றலாதலின், அவர் குலம் நிலைபெறுதல் இயல்பு. இருடிகள் எழுவர் பெயரினாலே பிராமணக் குலம் இன்றும் விளக்கமுறுதலை நோக்குக.

(எ) கடலுள் ஆழ்ந்த உலகினை எயிற்றினாலே எடுத்து நிறுவிய ஆதிவராகம் வழிபட அருள்புரிந்தவன் **தியானமூர்த்தி**; நிலமாகிய செல்வத்தினை படைதல், அஃதாவது அரசுரிமை பெறுதல் **பயன்**; நிலத்தினை நிறுவியோற்கு அருள் புரிந்த தெய்வத்தை வழிபடுவோர் நிலத்தினைப் பெறுதல் இயல்பாகுமாதலின்.

(அ) கயிலையை இருபது கரத்தினாலும் அசைத்த இராவணனை ஒரு திருவிரலினாலே வென்று பணிகொண்ட அருளாளன் **தியானமூர்த்தி**; ஒப்பற்ற கொடையினை யுடையோராதல் **பயன்**. அச்சிட்ட தேவாரப் பிரதியிலே 'நிகழ்வுடையரே' எனக் காணப்படும் தொடர் 'நிகழ் கொடையரே' என்றிருத்தல் வேண்டுமோ என ஐயுற வேண்டியிருக்கிறது.

(கூ) அரியும் அயனும் அடிமுடி தேடிக் காண்டற் கரிய அழற் பிழம்பாகி நின்ற முதல்வன் **தியானமூர்த்தி**; சந்ததி நிலைபெறுதல் **பயன்**.

(ω) புத்தரும் சமணரும் அறிதற்கரிய பரன் **தியானமூர்த்தி**; அழகிய உருவத்தினைப் பெறுதல் **பயன்**.

சொல்லினாலே சித்திர மெழுதிய தன்மையாக அமைந்து நிற்கும் இத் திருப்பாடல்களின் பயனை நுகர விழைந்தோர் குறித்த தியானமூர்த்திகளின் திருவுருவங்களை மனக் கண்ணி

னுல் நோக்கி அகங் களிகூர்வாராக. நான்காம் ஐந்தாம் ஆறுஞ் செய்யுட்களிலே தியானமூர்த்திகளோடு கிரியையாளர், யோகிகள், தவத்தர் என்னு மிவரையும் நோக்கல் வேண்டும்.

2-ஆம், 3-ஆம், 4-ஆம், 5-ஆம், 6-ஆம், 7-ஆம் குறள் வெண்பாக்கள், 5-ஆம், 1-ஆம், 2-ஆம், 3-ஆம், 6-ஆம், 8-ஆம் தேவாரப் பாடல்களோடு ஒருபுடை ஒப்புமையுடைய வாகலின், 'வாலறிவன்' யோகிக ளுள்ளத்திலே தோன்றும் இறைவனையும், 'மலர்மிசையேகினுன்' 'பதும நன்மலரது மருவிய சிவனையும்', 'வேண்டுதல் வேண்டாமை யிலான்' இடும்பை தீர்க்குங் காவற் கடவுளாதலின், 'அறிதுயி லமர் அரிவுரு வியல் பரனை' யும், 'இறைவன்' 'முழுவதும் அழிவகை நினைவொடு முதலுரு வியல் பரனை' யும், 'பொறிவாயி லைந்தவித்தான்' 'பொறியொழி அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையரனை' யும், 'தனக்குவமை யில்லாதான்' 'அரியும் அயனும் அறிவரிய' முதல்வனையும், குறித்து நின்றனவாமோ என எண்ண இடமுண்டு. மேலும், 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என்றாராதலின், எயிற்றினுலே உலகினை எடுத்து நிறுவிய ஆதிவராகம் வழிபட்ட தலைவனை 'ஆதிபகவன்' என்பதும், பொருள் இன்பம் என்னும் இரு பெருங் கடலிடைப் படிந்து நின்ற இலங்கையர் கோனை யுய்யக் கொண்ட அறக்கடலாகிய பேரருளாளன் 'அறவாழியந்தணன்' என்பதும் ஒருவகையாக அறியக்கிடக்கின்றன.

பரிமேலழகர், 3-ஆம் குறள்வெண்பா வுரையிலே, 'நிலமிசை நீடுவாழ்வார்' என்பதற்கு 'எல்லா வுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்' என வுரைத்து, 'நீடு' என்னும் மொழிக்கு 'அழிவின்றி' என வலிந்து பொருள் கொண்டார். 7-ஆம் குறள்வெண்பாவும் வீட்டுலக வாழ்க்கையைக் கூறிற்றெனக் கொள்ள வேண்டியிருத்தலின், 3-ஆம் குறள் வெண்பா பூவுலகத்திலே நீண்ட காலம் உயிர் வாழ்தலைக் குறித்தது எனக் கொள்ளுதல் பொருந்தும் உரையாகும். அற முதல் நாற்பொருளையும் கூறவந்த நாயனுர், அவைதமக்கு நிலைக் களமாகிய நிலவுலகத்திலே மாந்தர் பிணியின்றி நெடுநாள் உயிர்

வாழ்தலையும், இறைவழிபாட்டினால் அடைதற்குரிய ஒரு பெரும் பொருளாகக் கொண்டாரென வைத்து, அவர் நூற்குப் பொருள் காண்டல் அறிஞர்க்கு ஒருப்பாடாகுமென எண்ணுகிறேன். ‘மலர்’ என்பதனை ‘உள்ளக்கமலம்’ எனக்கொண்டு, உள்ளக் கமலத்திற் சென்றவனது மாட்சிமைப்பட்ட அடிகளை இடைவிடாது நினைப்போர் ‘அடிமையின் மிகை புணர்தர’ நீண்ட காலம் பிணியின்றி உயிர் வாழ்வாரெனவும்; அவர் தாம் வழிபடுந் தலைவனைப் போல ‘வேண்டாமை’யாகிய விழுச் செல்வத்தினை எய்தி நிற்பாராதலின், ஈண்டும் (இவ்வுலகத்திலும்) ஆண்டும் (இனி வரும் உலகத்திலும்) இடும்பை யிலராவரெனவும்; எப்பொழுதும் தம் புகழை மறந்து தலைவன் புகழைச் சொல்லும் இயல்பினராதலின், நல்வினை, தீவினை யிரண்டினையும் வென்று, நில்லா வுலகத்து நிலைபெற்ற புகழினை யடைவரெனவும்; தலைவனைப் போலத் தாமும் ஐந்தவித்து, மெய்யான ஒழுக்க நெறியி னின்று வீடுபெறுவ ரெனவும், கொள்ளின், நினைத்தல் மாத்திரம் செய்வோர், அரனடிமை யாகி மார்க்கண்டரைப் போலக் காலனது ஆணையைத் தானுங் கடந்து நிற்பாரென் பதும்; வீடுபேறடைய முயல்வார் நினைத்தலோ டமையாது, இடைவிடாது வாழ்த்துதலும், இறைவன் காட்டிய மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நிற்றலும் வேண்டுமென்பதும் பெறப்படுவன. சுருங்கக் கூறின், நினைத்தலும், வாழ்த்தலும் கைகூடப்பெற்று நெறிநிற்றல் செய்தாரே வீடுபே றடைதற் குரியாராதலின், 3-ஆம் குறள் வெண்பா வீடுபேறு கூறிற்றிலது என்பது முடிபு ஆகும்.

# இளமை நினைவுகள்

திரு. ச. க. கோவிந்தசாமி பிள்ளை, எம். ஏ.,
வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

[இஃது ஆங்கிலக் கட்டுரை ஆசிரியனான ஸ்டீல் என்பான் எழுதிய "Recollections of Childhood" என்பதின் மொழிபெயர்ப்பாம். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவ்வாசிரியன் வாழ்ந்தனன். அவல உவகைச் சுவைகள் ததும்பக் கட்டுரை இயற்றும் வன்மை வாய்ந்தவன்.]

**மக்களிடையே** சிலர் தம் வாழ்க்கையைப் பொறுத்தமட்டும் மகிழ்வெய்தாது, அவ்வாழ்க்கையின் நிகழ்ச்சிகளைப் பிறர் அறிந்த வழி தாம் மகிழ்வெய்துகின்றனர். அங்ஙனம் பிறர் நாட்டத்திற் படாத நிகழ்ச்சிகளெல்லாம் அவர்கட்குச் சுவை பயப்பன அல்லவாம். வேறு சிலரோவெனின் பெருங் கூட்டத்திலும் தனித்திருக்க விரும்புகின்றனர். இவ் விரு வகையினரின் செயல்களையும் ஏற்றுக் கொள்ளுதற்கில்லை. மனிதனின் இந் நில உலக வாழ்க்கை குறுகிய கால எல்லைக் குட்பட்டதா யிருத்தலால், உயர்ந்ததும், உண்மையுமான நட்புத்தொடர்பை புதிது புதிதாய் அவன் கொள்ளுதற்கு முயலுவதில்லையாம். இதைக்கருதி அறிவெனுந் திருவுடையோர், மறைந்துபோன தம் நண்பரை நினைத்துப் பாராட்டுதல் தம் கடமையென எண்ணித், தமக்கு முன் இவ்வுலகை நீத்து விண்ணேகின அவரைச் சில காலங்களில் தனித்திருந்து நினைத்தல் வழக்கம். முதுமைப் பருவம் எய்திய வழி, உளம் சோர்வடைந்திருக்குங்கால், நமக்கு இனியராகவும் நேயராகவும் இருந்து இறந்தோரை நினைத்தலைக் காட்டிலும் இன்பம் பயக்கத்தக்கது வேறொன்றுமில்லை. அத்தகைய நிலையில் ஒருகால், நண்பரோடு குலாவி களியாட்டயர்ந்த நினைப்பு எழுதல் இயல்பாம். இத்தன்மைத்தாய எண்ணங்கள் என் உள்ளத்தில் குடிகொள்ள, 'இன்று நண்பரை நினைந்து நினைந்து நைவதென உறுதி செய்துளேன்.' எனக்கூறிக்கொண்டு நேற்று

மாலை என்னுடைய குடிலை அடைந்தேன். அத்தகைய வேளைகளில் நான் என்னையே இகழ்ந்து கொள்வதுண்டு. என்னையெனின், என் நண்பர் மறைந்த காலத்தில் நான் ஆருத் துயருறுதற்கேற்ற காரணங்கள் இன்றும் வலியுடையனவாய் இருக்கவும், அவரை நினைக்குங்கால் என் உள்ளம் அன்றுபோல் விம்முவதில்லை. கண் கலங்காவிடினும் உளங்கலங்கி, மண்ணொடு மண்ணான என் பழைய நண்பரோடு நான் அடைந்த பேற்றைப்பற்றியெல்லாம் எண்ணுதல் உண்டு. இயற்கையின் நலனாய் அவல உணர்ச்சி காலப்போக்கில் குறைந்தாலும், இன்பத்தையே மிகுதியாய் நாடிநிற்கும் இயல்புடையோர்க்கு, கழிந்த துன்பச் செயல்களை நினைத்தலும், பண்டை வாழ்க்கையிற் படிப்படியாய் தம் உளத்தை ஊன்றச் செய்தலும் இன்றியமையாதனவாம். அதன் பயனாய் உளவமைதி தோன்றவே, அவர்தம் நெஞ்சம் விரைவும் குறைவும் இன்றி ஒழுங்காகத் துடிக்கின்றது. பழுதுபட்ட பெருங் கடிகாரமொன்றை செப்பனிட்ட உடனே அதன் முட்களை அவ்வேளைய காலத்தைக் குறிக்கும்படித் திருப்புவதில்லையாம். முதலில் மணி வரிசையாக அடிக்கின்றதா எனத் தேர்ந்த பின்னரே முட்களைத் திருப்பி வைக்கின்றோம். இம்மாலையும் முறையையே நான் பின்பற்றுகிறேன். எனக்கினியராய் இவண் இருந்து விண்ணுலகேகிய என் நண்பரின் நினைவுக்காக ஆண்டுதொறும் நான் ஒதுக்கி வைத்துள்ள நாள் இதுவாதலால், நான்கைந்து நாழிகைகள் என் வாழ்நாளில் அவ்வப்போது நிகழ்ந்த அவலச் செயல்களைப்பற்றி நினைந்து கழித்தற்குரிய தூய போதன்றோ?

எனக்கு ஐந்தாண்டுகள் கூட நிறையவில்லை. என் தந்தை இறந்தனர். அஃதே என் நினைவில் நான் முதன்முதல் உணர்ந்த துயராகும். அன்று மாத்திரம் நான் யாரைக் கூப்பிட்டாலும், என்னோடு விளையாடுதற்கு ஒருவரும் இசைந்தாரில்லை. அதன் காரணத்தையும் என்னால் அறிதற்கு இயலாது போயிற்று. என்னப்பனின் உடல் கிடத்தப்பெற்ற அறைக்குள் நுழைந்தது என் நினைவிலுள்ளது. அங்கு அவ்வுடலின் பக்கலில் என் தாய் தனித்திருந்து அழுதுகொண்டிருந்தாள். அப்பொழுது என்

கையிலிருந்த ஊதுகுழலைச் சவப்பெட்டிமேல் தட்டிக்கொண்டு, அப்பா அப்பா என்றழைத்தேன். என் னப்பனை எவரோ அப் பெட்டியில் வைத்துத் தாளிட்டனர் என்ற கருத்து அவ்வமயம் தோன்றியதாக எனக்கு நினைவிருக்கிறது. என் அறியாச் செயலைப் பார்த்திருந்த தாய், உளம் உடைந்தோட வருந்திக் கொண்டிருந்தவள், வாய்விட்டலறி, என்னைத் தன் கைகளாலும் அணைத்துக் கொண்டு, இருகண்கள் நீர்வாரக், 'குழந்தாய், நீ கூப்பிடுதல் உன் தந்தை காதில் விழாது. அவர் உன்னுடன் விளையாடார். அவரை மண்ணிலிடப் போகின்றனர். அங்கிருந்து அவர் வருவதும் இலர்.' எனக் கூறினள். என்னம்மை ஓர் அழகிய பெண் தகையார்; உயர்ந்த உளப்பாங்கை உடையவள். அவள் வருந்தும்போது அவள் தன் மேலான நிலை புலப்பட்டது. அவல மென்பது இன்னதென அறியாப் பருவத்தினனாய் இருந்தும், அவளுடைய துன்பக் காட்சி என்னுளத்தில் ஊடுருவிச் சென்று இரக்கத்தை அங்கு தோற்றுவித்தது. பிள்ளைப் பருவத்து உளம் கருவிலுள்ள உடலைப் போன்ற தென்பர். எங்ஙனம் கருவிலேயே உடலொடு தோன்றிய குறைபாடு மாற்றுதற்கரியதோ, அங்ஙனமே இளம் பருவத்தில் உளத்தில் பதிந்த காட்சிகள் மறக்கலாகாதனவாக இருக்கின்றன. ஆகையினுல் நன்மனப் பாங்கினை நான் உடையனுய் இருத்தலின், எனக்குத் தனிப்பட்ட பெருமை ஒன்றுமில்லையாம். பகுத்தறிவில்லா இளமையில் அடிக்கடி என்னம்மையாரின் கண்ணீரால் நான் கழுவப் பெற்றதால், என் உளத்தில் பேரிரக்கமும் ஆடவரியற்கைக்கு மாறுன மென்மைத் தன்மையும் தோன்றின. அம் மென்மையின் பயனுய் நான் பட்ட பாடு கொஞ்சமல்ல. அதனுல் ஏதேனும் நன்மை யுளவாயின், அஃது இது போன்ற அமையங்களில் பண்டைத் துன்பங்களையும், அவலச் செயல்களையும் நினைத்துப் பெரிதும் இரங்குதலாலேயாம்.

முதுமைப் பருவத்தில், நம் உளத்தில், இளமையில் விளைந்த நிகழ்ச்சிகள் தெளிவாகத் தோன்றுகின்றன. இக்காரணத்தால் என்னுடைய காளைப்பருவத் தோழர்களின் நினைவுகளெல்லாம் முன்னர்த் தோன்றுகின்றன. இளமையில் துஞ்சினேரைப் பற்

றியும், துன்பத்தில் துஞ்சினேரைப் பற்றியுமே நாம் கவலுதல் இயற்கையாம். ஒரு செயல் நிகழ்ந்தே தீரவேண்டும் என்பதை நாம் அறிந்திருந்தும், அதைப்பற்றி வருந்தாது இருத்தற் கியல வில்லை. வாழ்க்கையின் பெருஞ் சுமையைத் தாங்கமுடியாது நாம் பெருமூச்செறிந்து அலமறுகின்றேம். ஆனல் அச்சுமையி னின்றும் விடுதலை யடைய வாய்ப்புப் பெற்றேரை நினைந்து நைகின்றேம். பிரிந்தோர் ஒவ்வொருவரையும்பற்றி உளத்தில் உன்னுங்கால், அவரவர் துஞ்சிய நிலைக்கேற்றவண்ணம் வேறு வேறு எண்ணங்கள் உதிக்கின்றன. வீரருளத்தில், களிப்பும், கண்ணேட்டமும், வீரமும் உடைய இளவல்களின் நினைவு எழுதல் இயல்பாம். அவர் நாட்டில் அமைதி நீடித்திருப்பின், எவ்வாற்றுனும் புகழொடு இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பர். ஆனல் கொடுங்கோல் மன்னனின் பேராசை யென்னும் பேய்க் குப் பலியாயினர். அவர்தம் கையற்ற மனைவியரும் பிள்ளை களும் அக்கொடியோனைத் தூற்றுநிற்பர். ஆனல் போரில் வாளால் வெட்டுண்டு விழுந்த வீர இளைஞரை நினைப்பின், இரக் கம் தோன்றுவதில்லை. பெருமிதமே தோன்றுகிறது. அவ்வீரர் கொடிய கூற்றத்தையும் இகழ்ந்தவராய், மகிழ்ச்சியொடும் அவன் பால் அடைந்ததை நினைக்குந்தோறும், இறத்தல் பொருட்டு எழும் அச்சம் உளத்தினின்றும் நீங்குகின்றது. களத்தில் தம்மை எதிர்த்து நின்று போர் தொடுத்தோருக்கு அவ்வுலகை நல்கித், தாமும் அவரால் அவ்வுலகையே அடையப் பெறும் பேற்றை எய்திய பெரும் வீரர்களைப்பற்றி நினைப்பதை விடுத்துப், பகுத்தறிவு உதித்தெழா உளத்தினராய பச்சிளங் குழவிகளும் இளைஞர்களும் துஞ்சுவதை நினைப்பின் நம் உளத்தில் இரக்கமும் மென்மையும் குடிகொள்ளுகின்றன.

அத்தகைய மென்மைத் தன்மையை விளக்குதற்குச் சொற் கள் உளவேல், நான் எந்த மங்கையை முதலில் பார்த்ததும் காதல்கொண்டேனே அவள்தன் அழகையும், குற்றமற்ற உளப் பாங்கையும், அவள் இளமையிற் றுஞ்சியதையும் எடுத்துக் கூற முடியும். வனப்பே வடிவெடுத்த தெனத்தக்க பெண்ணணங்கு அவள். அவள் என் உளத்தைக் கவர்தல் வேண்டுமென நினையாது

கவர்ந்தாள். ஏ கூற்றமே! வீரர், பேராசையுடையோர், மேனிலையிலிருப்போர், செறுக்குடையோர் ஆகியோரின் உயிரைக் கொள்ளுதற்கு உரியை நீ. ஆனால் தாழ்மையும், மென்மையும், அறியாமையும் உடைய சிறுவர் சிறுமிகளிடத்தில் ஏனோ உன் கொடுமையைக் காட்டுகின்றாய்? முதுமையோ, வினைமேற் செல்லலோ, இடையறாத் துன்பமோ, என் உளத்தில் பதிக்கப் பெற்ற அம்மெல்லியலாரின் வடிவத்தை மாற்றுதற்கு ஆற்றல் அற்றனவாம். ஒரே நாளில் அவளை நான் மணக்கோலத்திலும் பிணக்கோலத்திலும் கண்டேன். இன்னும் புன்சிரிப்போடு கூடிய அம் முகத்தை என் கண்முன் காண்கின்றேன்...............

இங்ஙனம் பலவித அவல நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் நினைவுக்கு வந்துகொண்டிருக்கையில், என் பணிமகன் குடிலின் கதவினைத் திறந்து, மூடங்கல் ஒன்றையும் ஒரு குடத் தேறலையும் கொணர்ந்து முன் வைத்தான். அதை உண்டு களிக்க நண்பர் மூவரை அழைத்தான். எங்கள் நால்வருக்கும் இடையிலுள்ள நட்பின் நெருக்கத்தால், எங்கள் உளநிலை எவ்வாறிருப்பினும், கூடி மகிழ்தல் வழக்கம். தேறல் உட்செல்லவே, உடற் சூடெய்த, உளம் பூரித்தது. சோர்வடைந்திருந்த எமக்கு அது புத்துணர்ச்சியை அளித்தது. இன்று மூவரும் சந்தித்தோம். நாங்கள் ஒவ்வொருவரும் இரண்டு குப்பி தேறலருந்தியும், நேற்று உளத்தில் தோன்றிய அவலக் கருத்துக்களை என்னால் மறக்கமுடியவில்லை.

# காலிங்கராயப் பெயரினர்
## அரசர்கள், அதிகாரிகள்; புலவர்கள்.

### கல்வெட்டு ஆராய்ச்சி.

திரு. சி. கு. நாராயணசாமி முதலியார், பேரூர், கோவை.

#### காலிங்கோன்

**காளிங்கராயர்** என்ற ஓர் வகைப் பட்டப் பெயர், தமிழ் நூல்கள் சிலவற்றிலும், தனிநிலைக் கவிகளிலும், தென்னாடு, ஆந்திர கருநட நாடுகளின் கல்வெட்டுக்களிலும் காணப்படு கின்றன. இப்பெயரைக் கொண்டு இவர்கள் சிற்றரசர்களா? பேரரசர்களா? மற்றும் யாவர்? இவர்க்கு இப்பெயர் எப்படி வந்தது? யாரால் கொடுக்கப்பட்டது? என்பன பற்றி யான் ஒரு சமயம் ஆராய்ந்தபோது, அப்பெயர் தாங்கிய மிகப் பலர் சிற்றரசர்களும், பேரரசர்களும், அமைச்சர்களும், பிரபுக்களும், படைத்தலைவர்களும், அதிகாரிகளும், உபகாரிகளும், ஊர்த்தலைவர் களும், புலவர் பெருமக்களுமாகப் புகழ்பெற விளங்கி யிருந்தன ரென்று எனக்குப் புலப்பட்டது. இங்ஙனம் விளங்கி யிருந்த இவர்களது அரியதும், இனியதுமான செயல்கள், ஆராய்ச்சி யாளர்க்கும், புலவர்கட்கும், காளிங்கராயப் பெயர் தாங்கி விளங்கும் குலத்தினர்கட்கும் சிறிதேனும் பயன்படக் கூடு மெனத் தோன்றியதால், அவற்றைத் தமிழ் கற்றோர் நலத்திற் கென்றே தோன்றிய நமது கரந்தைத் தமிழ்ப் பொழிலில் வெளி யிட முன் வந்தேன்.

இராயன் என்பதற்கு அரசன் என்று பொருள். பெருமை சிறந்த இப்பெயரைப் பண்டைக் காலத்து விளங்கிய பேரரசர் களும், சிற்றரசர்களும், தமது அதிகாரத்தின் கீழ்ப் படைத் தலைமையிலும், பேராண்மை தோன்ற வீரம் விளைத்துக் காட்டும் தீரச் செயலிலும், கனத்த புலமையிலும், மேம்பட்ட

அறச் செயலினும், பொன்றுப் புகழ் விளைத்தலினும் பெயர் சிறந்தவர்கட்கு அவ்வப்போது காலம் நேர்ந்த சமயத்தில் விருதுப் பெயராக (அதாவது, காவிதி, ஏனுதி, தமிழ்வேள் என்பன போன்றதொரு பட்டப்பெயர்) அளித்துப் பாராட்டிய தாக அறியப்படுகிறது.

இங்ஙனம் அரசர்க்குரிய பெயராகிய இராயப் பெயரைப் புலவர்கட்கும், பிறர்க்கும் பரிசளித்த பேரரசர்கள் யாவர்? அதனைப் பெற்றுக்கொண்ட பேராளர்கள் யாவர்? என்பன வற்றைச் சிறிது ஆராய்வாம்.

இங்கு முதன்முதல் குறிப்பிடத் தக்க பேரரசன், காவிரி, வளஞ் சிறந்த சோழ நாட்டில், கி. பி. 1012—1042-ஆம் ஆண்டு, களில் பேரரசு நடாத்திச், **கங்கை கொண்ட சோழன், உத்தம சோழப் பல்லவன்** முதலிய பெயர்களைத் தாங்கிய **முதலாம் இராசேந்திர சோழனுவன்.** இவ்வரசன், **தொண்டை மண்டலத் துப், புலியூர்க் கோட்டத்துக், குன்றத்தூரில்,** சைவ வேளாளர் குலத்துக் **குன்றத்தூர் கிழார்க்குத்** திருமகனாகத் தோன்றிச், சிவ மணம் கமழும் சிவனடியார்களது அருட் சரிதத்தைச் செம்மை பெற வியற்றி, அதற்குப் **பெரிய புராணம்** என்ற பெயரிட்டுத் தம்மைப் பெரிதும் களிப்பித்த சைவப்பெரியார் **சேக்கிழார்க்குத்** தம் பெயராகிய, **உத்தம சோழப் பல்லவராயர்** என்ற பெயரை விருதுப் பெயராக அளித்துப் பாராட்டினன்.

இதனால், **இராயன்** என்ற விருதுப் பெயரைப் புலமை மிகுந்த பெரியாருக்கு அரசர்களால் வெகுமதியாக அளிக்கப் படுவதை அக்காலத்தில் வழக்கத்தில் கொண்டிருந்ததாக அறியப்படுகிறது.

I. இனி, **இராயர்** என்ற பெயருடன் தமிழ் நாட்டில் விளங்கிய அரசர்கள் யாவரென்பதைக் கவனிப்பாம்.

### 1. சம்புவ ராயன்

கி. பி. 1337-ஆம் ஆண்டு முதல் கி. பி. 1360-ஆம் ஆண்டு வரை **தொண்டை** நாட்டுக் **காஞ்சிபுரத்தை** இராச மாநகரமாகக் கொண்டு அரசு செய்தவன். **பல்லவ** குல மல்லன். அவன்

பெயர், சகலலோக சக்கரவர்த்தி இராஜநாராயண சம்புவ ராயன் என்பது. இச் சம்புவ ராயனுக்குப் பின் பட்டம் எய்திய அரசன் பெயர், ஏகாம்பரச் சம்புவராயன் என்பது. இவன், கண் பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள் என்று பெயர் சிறந்த புலவர்களால் பாடப்பெற்ற ஏகாம்பரநாத ருலாவில் பல்லிடத்தும் பாராட்டப் பெற்றிருக்கின்றனன். அவை,

ஏறிக்கும் புகழ்கச்சி யேகாம்பரச் சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக் கொடியான் ......
சம்புகுலத் தொருவன் சாற்றுகைக்கா மென்றளித்த
செம்பொன் மணிமகுடஞ் சேர்வித்து

என்பன.

மற்றும் இவன்,

மேதைப் புலவரெண் ணேகாம் பரச்சம்பு மெச்ச நெடுங்
காதைப் புலவ ரிரட்டையர் பாடுங் கலம்பகமும்

எனவரும் தோண்டை மண்டல சதகத்தில், படிக்காசுப் புலவ ராலும் பாராட்டப் பெற்றிருக்கின்றனன்.

இவ் விரு பல்லவ மன்னர்களுக்குப் பின் பல்லவருடைய அரியாசனத்தை அலங்கரித்திருந்தவன், மல்லிகார்ச்சுன சம்புவ ராயன் என்னும் பெயரினன். இவன், தோண்டை நாட்டுப், படுவூர்க் கோட்டத்தைச் சார்ந்த, காவேரிப் பாக்கமாகிய விக்கிரம சதுர்வேதி மங்கலத்தில் பூதானம் ஒன்று செய்ததாகக், காவேரிப் பாக்கம் வரதராசப் பெருமாள் கோயில் மூலத்தானத்துத் தென் மதிற் சுவரில் பொறிக்கப் பெற்றிருக்கிறது. இக் கல்வெட்டின் காலம் சகம் 1295-க்கு ஆங்கிலவாண்டு 1373.

## 2. சேதி ராயர்

இவர், தேவாரத் திருமுறைகளில் ஒன்பதாம் எண்ணுடைய திருவிசைப்பாவை இயற்றியவர். சிவமூர்த்தியைப் பாடி பரமுத்தி அடைந்தவர். சோழ பரம்பரையைச் சேர்ந்த சேதியர்க்கு அரசரா யிருந்தவர். சேதியர் கோன் என்று தமது திருப்பாசுரத்தில் தாம் திருவாய் மலர்ந்திருப்ப தனால், இவர் அரசரா யிருக்கலா மெனத் தோன்றுகின்றது.

## 3. கச்சி ராயர்

இப் பெயர் புனைந்தார் ஒருவர், தமிழ் நாவலர் சரிதையில் 77-ஆம் பக்கத்தில் காணப்படுகின்றனர். இவரைப் பற்றிய செய்திகளொன்றும் தெரியக் கூடவில்லை. 'கச்சிராயர் சரக் கறை தியாகங் கொடுக்கப் பாலிக்க வந்த நீலகங்கனைக் கங்க தேவன் பாடியது' என்ற தலைப்பின் கீழ் ஒரு செய்யுள் காணப் படுகிறது. அது,

அலைவ ளைத்த திருப்பாற் கடலிலை
யாட ராவி னணையிலை பச்சையால்
இலைவ ளைத்த மணிமண் டபமிலை
யிங்கு நீவந்த வாறே தியம்புவாய்
கொலைவ ளைத்த விலங்கேசன் மாமலர்க்
சொத்து மாமுடி பத்துக்கு மன்றொரு
சிலைவ ளைத்த கரநீல கங்கனே
திங்கள் வெண்குடைச் சிற்றம் பலவனே

—தமிழ் நாவலர் சரிதை 193.

என்பது.

## 4. திருமலைராயர்

இச் சிற்றரசன், விசயநகரத்து மல்லிகார்ச்சுன ராயர் (கி.பி. 1449—1465), விருபாட்ச ராயர் (கி. பி. 1466—1485) என்பவர் களுடைய பிரதிநிதியாகத் தென்னாட்டுள்ள திருமலை ராயன் பட்டினத்திலிருந்து, கி. பி. 1453-ஆம் ஆண்டு முதல் கி. பி. 1468-ஆம் ஆண்டு வரை அரசு செய்திருந்தவன். இத் திருமலை ராயன் பட்டினம், நாகைப்பட்டணத்துக்கும், காரைக்காலுக்கும் இடையி லிருக்கிறது. இவனது தமிழ்ப் பேரவையில், திருக் கோவலூர் அதிமதுரக் கவிராயரும், அறுபத்து நான்கு தண்டி கைப் புலவர்களும் சிறப்புடன் விளங்கியிருந்தனர். ஆனைக்கா அகிலாண் டம்மையார் அருள் பெற்ற ஆசுகவி காளமேகப் புலவர் யமகண்டம் பாடி வெற்றி பெற்றது இத் திருமலை ராயனது அவையிலே தான்.

## 5. ஸ்ரீ கிருட்டின தேவராயர்

இவர், அம்பி விசயநகரத்து அரசர் நரசிம்மராயரின் இரண்டாம் புதல்வன். கி. பி. 1509-ஆம் ஆண்டில் அரசுமுடி தரித்து கி. பி. 1529-ஆம் ஆண்டுவரை விசய நகரத்தைத் திறமையாக அரசு செய்திருந்தனர். விசயநகரத்து அரசர்களுள், இறைமாட்சி, கல்வி, ஆண்மை, கொடை முதலியவற்றால் புகழ் சிறந்து விளங்கியவர் இவர் ஒருவரேயாம். ஆந்திரம், கன்னடம், வடமொழி முதலிய மொழிகளில் புலமை சிறந்திருந்தது போலவே, தமிழ்மொழியிலும் புலமை பெற்றிருந்தாரென்று கூறுகின்றனர். இவர் ஆந்திர கன்னட நாட்டு அரசராயிருந்தும், தமிழ் நாட்டரசர் பகுதியில் வருவானேன்? என்று சிலர் ஐயுறுவர். இவர் தமிழ் நாட்டினரால் நன்கு அறியப்பட்டதோடு, இவரது அருமை பெருமைகளைப்பற்றி,

* கலிங்க மிழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானக்ருட்ண பூபாலா! வுன்றனக்குப்
பின்னிட்ட வொட்டியன்போற் பெண்.

என்று குமார சரசுவதிப் புலவரும்;

படைமயக் குற்றபோதும் படைமட மொன்றி லாதான்
மடைசெறி கடகத் தோளான் மதிக்குடை மன்னர் மன்னன்
கெடிமன்னர் வணங்குந் தாளான் கிருட்டின ராயன் கைபோற்
கொடைமட மென்ப தம்ம! வரையாது கொடுத்த லாமே.

என்று மண்டல புருடரும்;

---

* இக் கவியில், உனக்குத் தோல்வியுற்ற ஒட்டர தேசத் தாசனைப் போலவே, அவன் பெண்ணும், கலிங்கம், நுதிக்கைச் சங்கம், கடகம் என்னும் இவற்றை உன் முன் நெகிழ விட்டாள் என்று சிலேடை நயம் பெறக் காட்டப்பட் டுள்ளமை காண்க. ஒட்டியன் கலிங்க தேசத்தையும் நுதிக்கையையுடைய யானைக் கூட்டத்தையும்,† கடகம் என்ற தலைநகரையும் இழந்தோடினன்; அங்ஙனம் இழக்கும்படி செய்த உன் புகழை அறிந்த அவன் மகளும், வீரனான உன்னை அடைய விரும்பியதனால் உண்டான தன் உடல் மெலிவால், தானும் கலிங்கத்தையும் (ஆடையையும்), நுதிக்கைச் சங்கத்தையும் (முன் கையி லணிந்த வளைகளையும்), கடகத்தையும் (தோள் வளையையும்) நழுவ விடலானாள், என்று கவி சொல்லணி பெறக் கூறும் அழகு அறிந்து மகிழத்தக்கதாம்.

† கஜபதியாதலின், யானைக் கூட்டங்களை இழந்தானென்க.

வானப்ர காசப் புகழ்க்கிருட்ண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்ர காச குருராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர காச முடையோர் வளர்தொண்டை மண்டலமே.

என்று படிக்காசுப் புலவரும்;

மருவுபுகழ்க் க்ருட்ண மகாராச ராணை
அரிய விடமலையா ராணை—திருவாரூர்ப்
பாகற் கொடியறுப்பார் † பாதந் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே.

என்று தத்துவப் பிரகாசரும் ;

*ஊழித் துலுக்கல்ல வொட்டியான் றானுமல்ல
வீழித்‡ துலுக்குவந்து மேலிட்டே—யாழி$
சிறந்த திருவாரூர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே க்ருட்ணரா யா.

என்று தத்துவப்பிரகாசரும்; ஆகிய தமிழ் வல்ல புலவர் பெருமக்கள் புகழ்ந்து பாடி யிருப்பதனாலும், இவ்வரசர் தமிழ் நாட்டினர்களால் நன்கு அறியப் பெற்றவ ரென்பது நன்கு விளக்கமாம். அன்றியும், இவர், திருவாரூர், திருவண்ணுமலை, சிதம்பரம், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் முதலிய தேவாலயங்களுக்குக் கணக்கிலடங்காத தனக் குவியல்களைக் கொண்டு சிறந்த திருப்பணிகளைச் செய்திருக்கின்றனர். கிருட்டினராயரது விசயம் என்னும் நூல் இராயரின் பேராண்மைகளை எடுத்துங் கூறும். தென்னுட்டில் வழங்கும் இராயர் அப்பாஜி கதைகளில் குறிப்பிட்டிருக்கும் இராயரும் இவரே யாவர்.

---

†திருவாரூர் உற்சவத்தில் பாகற் கொடி யறுத்தல் அல்லது பாகல் வேட்டை என்ற திருவிழாவும் ஒன்று.

* கிருட்டின தேவர் பட்டம் அடைவதற்கு முன், ஒட்டியரும் துருக்கரும் சேர்ந்து பிரவேசித்துத் தென்னுட்டை அலைத்து வந்தமையால், 'ஊழித் துலுக்கல்ல ஒட்டியான் றானு மல்ல' எனப்பட்ட தென்க.

‡ திருவீழி மிழலையி லிருந்து கடவுளைப் பூசித்து வந்த பட்டாது தீச்செயல் நோக்கி அவரை 'வீழித் துலுக்கர்' என்று ரென்க.

$ திருவாரூர்த் தேர்க்கு 'ஆழித்தேர்' என்ற பெயர்வழக் குண்டு.

## 6. சேதி ராயர்

இவர், சோழ நாட்டுப் புதுவைக்கண் ணிருந்த மகோபகாரி; வேளாண் மரபினர். தமிழ்ப் பெருமான் கம்பரைக் கொண்டு இராமாயணம் பாடுவித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலது திருமகனுவர். ஏரெழுபது என்னும் மரபு நூல் கம்பர் அரங்கேற்றுகையில் உடனிருந்து கேட்டவர். இங்ஙனம் கேட்டுக் கொண்டிருந்தபோது, இவரை விடந் தீண்ட, அதனல் அரங்கேற்றம் தடைபட லாகாதென் றெண்ணிச், செய்தியை வெளிப்படுத்தாது மறைத்து வைத்திருந்தனர். விடந் தலைக் கேறியதால் மூர்ச்சித்து வீழ்ந்தனர். அதனைக் கம்பர் அறிந்து, தமது அருமைத் தெய்வ வாக்கினுற் சில வெண்பாக்கள் பாடி, விடத்தை யேறிய பண்பே யிறக்கிச், சேதிராயரை உயிர்ப்பித் தனர். இவ்வுண்மை,

அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைத்தே
ரெழுபதுங் கொண்டு புகழ்க்கம்ப வாண னெழுப்பவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட தாற்றொண்டை மண்டலமே.

—தொண்டைமண்டல சதகம்.

... ... ... ... ... ... ... ... பாவலர்தா
மேரெழுப தோதியரங் கேற்றுங் களரியிலே
காரிவிட நாகங் கடிக்குங்கை —திருக்கை வழக்கம்.

என்பவற்று லறிக. இப்பிரபுவுக்குச், சேதிபன், சேதிபர் கோன், புதுவையர் கோன், பிள்ளைப் பெருமாள் என்ற பெயர்களும் இருந்த தென்பதற்கு, மாயூரத்திற்கு அடுத்த மூவலூர்ச் சிவன் கோயிலில் வெட்டப்பட்டுள்ள அடியில் காணும் சாசனப்பாடல் தக்க சான்றும். அப்பாடல்,

பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனைக்
காரோசைக் கையானைக் கண்டீரோ—பாரோர்
விடுங்கோள் கொடுங்கோ(ள்) விழியருள் பூண்டன்ன
மிடுங்கோள் கொடுங்கோ.........

என்பது.

## II. இராயர் பட்டந் தாங்கிய புலவர்கள்.

### 1. தத்துவராயர்.

இவர், கி. பி. பதினேராம் நூற்றாண்டில் சோழ நாட்டில், வீரை என்னும் ஊரில், மாதவாச்சாரியார் குலத்தில் தோன்றிய அந்தணர். வடமொழி, தென்மொழிகளில் வல்லவர். இந் நல்லார் ஸ்ரீ சிவப்பிரகாசரை ஆசிரியராகக் கொண்டு, பாடுதுறை, சிவப்பிரகாச வெண்பா, நெஞ்சுவிடு தூது, சிலேடை யுலா, கலி மடல், அஞ்ஞைவதைப் பரணி முதலிய அரியதும், இனியது மான தத்துவ நூல்களை இயற்றித், தத்துவ ராயர் எனப் பெயர் சிறந்தவர். அஞ்ஞைவதைப் பரணி பாடிய திறம் மிகவும் வியக்கத் தக்கது.

### 2. சேனுதி ராயர்.

இவர், யாழ்ப்பாணம், நெல்லிப்புழைப் பண்டை வேளாளர் குலத்தில் தமிழ்ப் புலமையால் மிகச் சிறந்தவர். வெண்பாவை இரு முறையில் கற்கும் அறிஞர். நன்னூல் சூத்திரங்களனைத் தையும் நாற்பது நாளில் கற்றுப் பாராமல் ஒப்புவித்தன ரென்றால், இவரது நினைவின் வியப்பு பெரிதும் பாராட்டத் தக்க தன்றோ!

> நானு திராவிடமு நன்னிலக்க ணுறுறச்செய்
> சேனுதி ராயனையோ செத்ததென்றீர்—வானுதி
> பொன்னிலத்து முண்மை புகலுரைப் பதற்காய்
> இந்நிலத்து விட்டெடுத்த தோ.
>
> —பாவலர் சரித்திர தீபகம்.

### 3. பிரமாதி ராயர்.

இவர் வடமொழி, தென்மொழிகளில் மிகச்சிறந்த புலமை பெற்றவர். தமது புலமை ஆற்றலால், சேதுபதி அரசரால், இராமநாதபுரம் சில்லாவில், நல்லூர்க் குறிச்சி யென்னும் ஊரை யும், கடம்பங்குளம் என்னும் ஊரையும் பரிசிலாகப் பெற்றவர். சத்திபூசை சித்திபெற்றதால், அத்தேவியின் அருள் பெற்றிருந் தனர். மதுரை அங்கயற்கண்ணி யம்மையார் அடியிட்ட பூமாலை திருக்கழுத்தில் தானே ஏற்பப் பாடித், தம்மோடு வாதுபுரிந்த

புலவனை வென்றவர். சேது நாட்டு வீரசோழன் ஊரிலிருந்த கவிராச பண்டிதருக்கு நமது பிரமாதிராயர், வடமொழியி லுள்ள சௌந்தரிய லகரிக்குத் தமிழில் பொருள் கூறிய ஆசிரிய ராவர்.

## 4. வீரை ஆசு கவிராயர்.

இவரது பிறப்பகம் சேதுநாட்டு விசுவனூர் சேகரத் துள்ள நல்லூர் வீரை என்னும் ஊர். இதற்குக் குலோத்துங்கச் சோழ நல்லூ ரென்பது மறுபெயர். இது சேதுபதிகளின் பழைய கல்வெட்டுக்களில் கண்ட வூர். இவரே அரிச்சந்திர புராணத்தைத் தமிழில் விருத்தமாகப் பாடிய புலவர். இவருடைய செய்யுள் நடை தமிழ் கற்றூர்க்குச் சுவை பயக்கும் சீரிய தன்மை யுடையது. தாம் பாடிய புராணத்தைத் திருப்புல்லாணிச் சக்கர தீர்த்தக் கரை மேன் மண்டபத்தில் அரங்கேற்றினர்.

## 5. அழகிய சிற்றம்பலக் கவிராயர்.

இப் புலவர், சேதுபதி அரசர்களைப் புகழ்ந்து, தளசிங்க மாலை என்ற இனியதோர் நூலைப் பாடி, சேதுபதிகளின் நன்மதிப்பைப் பெற்றவர். மிதிலைப் பட்டி, இவர் பாட்டுக்கு அரசர் பரிசிலாக அளிக்கப்பட்டது.

## 6. அமுத கவிராயர்.

இக் கவிராயர், சேதுபதி அரசர், இரகுநாத சேதுபதி அவர்கள் மீது, ஒரு துறைக் கோவை பாடிப் பரிசு பெற்றவர். இவ் வினிய நூல் தமிழ் மக்களால் பெரிதும் பாராட்டப்பெற்ற சிறப்பையுடையது.

## 7. வெண்பாப் புலிக் கவிராயர்.

இவர் சேது நாட்டுச் செவ்வூரைப் பிறப்பிடமாகக் கொண்

டவர். வசை பாடுவதில் வல்ல புலவர். இது,

கந்தனே நீயானுற் கற்றவனே நானுனு
லிந்த வருடம்போ யெதிராண்டில்—வந்தவினை
தீரா வினையாய்த் திரும்பா வியாதியாய்
வீராசா மிக்கே விதி.

என்னும் கவியால் தெளிவாம்.

## 8. அதிமதுரக் கவிராயர்.

இவர் திருமலைராயனது ஆத்தான வித்துவான்களுள் மிகச் சிரேட்டர். இவர்க்கு அறுபத்து நான்கு கனக தண்டிகைப் புலவர்கள் கற்றுச் சொல்லிகளாக விருந்தனர். இவரது பிறப்பகம் வட ஆற்காடு சில்லா திருக்கோவலூர். இவ்வுண்மை,

கோக்குதிரை நின்குதிரை கோவன்மதுரா வொன்னூர்
மாக்குதிரை யெல்லா மனைக்குதிரை—தூக்குதிரைத்
துங்கக் கரைக்குதிரை சொக்கன் குதிரைசது
ரங்கக் குதிரைகளே யாம்.

என்ற காளமேகப் புலவர் பாடிய வெண்பாவால் தெளியப்படும்.

'கோவல் மதுரா' என்றதனுல் அதிமதுரக் கவிராயர் ஊர் திருக்கோவலூர் போலும். இப்புலவர் காளமேகப் புலவருடன் வாது செய்து தோற்றவர்.

## 9. முத்துக்குமாரக் கவிராயர்.

இப் புலவர், ஈழ மண்டலம், யாழ்ப்பாணத்துச், சுன்னுகம் என்ற ஊரினர். கோழைபடா மேழிச்செல்வ முடைய வேளாண் மரபினர். கவி பாடுவதில் பெருந் திறமை வாய்ந்தவர். அவர் பாடிய பாடல்கள் எண்ணிறந்தன. சிதம்பரம் கூத்தப் பெருமான் மீது பாடிய கவிகளில் ஒன்றை இதன் கீழ் சாயலுக்குக் குறித்திருக்கிறோம். அப்பாடல்,

நன்மைசெய் தறிகிலேன் தன்மவழி செறிகிலேன்
நம்பினோர்க் குதவிசெய்யேன்
நந்தாவனம் வையேன் மாதானம் மீந்துயேன்
நற்கொடை யிலாத கையேன்

புன்மைவழி தேடுவேன் கன்மவழி நாடுவேன்
பொய்ச்சூது விளையாடுவேன்
புல்லரைப் பாடுவேன் புலைமகட் கூடுவேன்
பொய்ச்சமய வழியோடுவேன்
சென்மமரு டாய்தந்தை குருதெய்வ நிந்தனைகள்
செய்துளே னெனினும் வாயாற்
சிவசிதம் பரமென்று சொல்லுமடியேன் பவந்
தீரா திருக்குமோ தான்
சின்மய சொரூபனே! யுன்மய மதாம் பாத
தெரிசன மெனக் கருளுவாய்
சிதம்பர மெனுந்தவர் நிதம்பா விதம்பெறு
சிதம்பர மகா தேவனே.

என்பது.

## 10. சுப்பிரதீபக் கவிராயர்.

இப் பெயர் தாங்கிய புலவர், கோமுனை என்னும் ஊரினர். இவர் சமகாலத்துப் புலவர் பலருள் பலபட்டடைச் சொக்கநாதப் புலவரும் ஒருவர். சாதியில் இருப்புக் கொல்லர். நிலக்கோட்டைச் சமீன், நாகம கூழப்ப நாய்க்கரவர்கள் மீது கூழப்ப நாய்க்கன் காதலும், விறலி விடு தூதும் பாடிப் பெயர் சிறந்தவர். கற்பனையும், விற்பனமும் விரவிய இவரது இனிய வாக்குச் சுவையும் நயமும் மிக வாய்ந்தவை.

இவ்வளவே கவிராயர் பட்டந் தாங்கிய புலவர்களைப்பற்றிக் குறிக்கத் தக்கவை.

(தொடரும்.)

# திருக் கடம்பூர்ச் சிவன் கோயில்களின் கல்வெட்டுக்கள்

திரு. வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு.

சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் கடம்பூர் என்பதும் ஒன்றாகும். இது சைவ சமய குரவர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், இவர்களால் பாடப் பெற்ற பெருமையும், பழமையும் வாய்ந்தது. இது தென்னாற்காடு ஜில்லா சிதம்பரந் தாலூகாவி லுள்ள காட்டுமன்னார் கோவிலுக்குத் தென்மேற்கில் சுமார் நான்கு கல் தொலைவில் உள்ளது.

இக் கடம்பூர், மேலக் கடம்பூர் என்றும், கீழக் கடம்பூர் என்றும் இருவகைப்படும். இவற்றுள் மேலக் கடம்பூரே, மேற்குறித்த இரு குரவர்களாலும் பாடப்பெற்ற கரக் கோயில் அமைப்பு உடையதாகும். இக் கோயில் கருப்ப இல்லின் மேற்குப் பக்கத்தில், விட்டுணுவின் படிமமும், கிழக்குப் பக்கத்து வாயிற்படியில், இரண்டு கைகளுள்ள வாயில் காவலாளர்களின் படிமங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், இக் கோயில் பல்லவ மன்னர்களால் கட்டப்பெற்றதாகும்.

கருப்ப இல்லின் அடிப் பகுதி, நான்கு உருளைகளுடன், இரண்டு குதிரைகளால் இழுக்கப்பட்ட தேர் வடிவில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இக் கோயில் விமானத்தின் அமைப்பு நோக்கி, இதற்குக் கரக்கோயில் என்று ஆன்றோர் பெயர் வைத்தனர் போலும். (இதுபற்றி ஆராய்ச்சியாளர் நன்கு ஆராய்ந்து தங்கள் கருத்தைத் தெரிவிப்பார்களாக.)

கருப்ப இல்லைச் சுற்றிலும் பல அழகிய படிமங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் கீழே எழுதப்பட்டிருப்பன கொண்டு, அவ்வூர் இறைவனை, ஓரோமயு மக இருடி, கோடி

உருத்திரர், சந்திரன், பதஞ்சலி, பர்வத இராசன், வேதங்கள், இவர்களெல்லாம் பூசித்துப் பேறு பெற்றார்களென்ற செய்தி புலனாகின்றது.

இம் **மேலக் கடம்பூருக்குக்** கிழக்கே அரைகல் தொலைவில் **கீழக் கடம்பூர்** இருக்கின்றது. இவ்வூரில், மிகப் பழைய சிவன் கோயில் ஒன்று, எல்லாம் இடிந்த நிலையில், இருக்கின்றது. **கடம்பூர் இளங்கோயில்** என்று **க்ஷேத்திரக் கோவையில்** வைத்துப் பாடப் பெற்ற வைப்புத் தலம் இதுவே ஆதல் வேண்டும். இக் கோயிலைக் **கடம்பூர் இளங்கோயில்** என்று குறிப்பிடும் கல்வெட்டு இல்லாமற் போனாலும், கருப்ப இல்லைச் சுற்றிலும் பல கல்வெட்டுத் தொடர்கள் காணப்படுகின்றன.

இவ் விரு கோயில்களிலும் தீட்டப்பெற்றுள்ள கல்வெட்டுக்களை, கோடை விடுமுறையில் சென்று, எழுதிவந்துள்ளேன். ஆராய்ச்சியாளர்க்குப் பயன்படும் என்று கருதி அவைகளை வெளியிடலானேன்.

### கடம்பூர்க் கரக்கோயில் கல்வெட்டு.

**இடம்:** அர்த்த மண்டபத்தின் தென்பாகம்.

**மன்னன்:** முதலாங் குலோத்துங்கன்.

**காலம்:** 49-ஆம் ஆண்டு.

1. சுவஸ்திஸ்ரீ புக(ழ்)மாது விளங்க ஜயமாது விரும்ப நில மகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடிசூடி

2. மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனை மன்னவர் இழியலுற் றெதிர்தர திக்கணக் கீர்த்தி தக்கண நடாத்தி வீர ஸிம்ஹாஸ

3. நத்து உலகுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோபர கேசரி பன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்

4. குயாண்டு 49 ஆவது விருத ராஜ பயங்கர வளநாட்டு மேக்காட்டுக் கடம்பூர் திருக்கரக் கோயிலுடையார் ஸ்ரீகோயில் கா

5. ணி உடைய ஸ்ரீவஜாஹணங் கௌசிகன் பவழம் அகத்தீஸ்வர முடையானாந தொண்ட நாயக பட்டநும், கௌசிகன் பிச்சன் செய்

6. யபங்கமரான ராஜேசு பட்டநும் ............... உள்ளிட்ட மகாசபையோம். ஜெயங் கொண்ட சோழம

7. ண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து வெளிமா நாட்டு இரையூர், இரையூர் கிழவன் ........ சாணன் பக்கல் இத்தேவர்க்கு இவ்வாட்டை கற்கட நாயிற்று திருநுந்நா விளக் கொன்று வைக்க நாங்கள் கொண்ட காசு கூ. இக்காசு ஆறுங்கொ

8. ண்டு ஒரு திருநுந்தா விளக்கு சந்திராதித்தவற் செல்ல வேண்டும் நிலம் .... .... திருத்தக் கடவோமானோம். இவ்வனை வோம்.

## சில குறிப்புக்கள்.

முதற் குலோத்துங்க மன்னன் அரியணை ஏறிய 49-ஆம் ஆண்டில், கடம்பூர்க் கரக் கோயில் காணி உடைய தொண்ட நாயக பட்டன் உள்ளிட்ட சபையார், செயங்கொண்ட சோழ மண்டலத்து, ஊற்றுக் காட்டுக் கோட்டத்து, வெளிமாநாட்டு இரையூர் கிழவன் பக்கல் கரக் கோயிலுடைய தேவர்க்குத் திருநுந்தா விளக்கு ஒன்று வைப்பதற்கு ஆறு காசைப் பெற்று, அதைக் கொண்டு அவ்விளக்கை சந்திர சூரியர் உள்ள வரையில் நடத்த வேண்டுவதற்காக ஒரு நிலத்தைத் திருத்தியுள்ளார்கள் என்று இக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

முதற் குலோத்துங்க மன்னன் காலத்தில், காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட நிலப் பரப்பே, விருதராஜ பயங்கர வளநாடாகுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தார்கள். இக் கல்வெட்டால் கொள்ளிடப் பேராற்றிற்கு வடபாலும் விருதராஜ பயங்கர வளநாடு பரவி இருந்தது என்று அறியக் கிடக்கின்றது.

இக் கடம்பூர் மேக் காட்டுக் கடம்பூர் என்று குறிக்கப் பெற்றிருக்கின்றது. இக் கடம்பூருக்குக் கிழக்கேயுள்ள தேவாரம் பெற்ற தலமாகிய திருக் கானாட்டு முள்ளூர்ச் சிவன் கோயிலில்,

அவ்வூர் **கீழ்க் காநாட்டு** முள்ளூர் என்று குறிக்கப் பெற்றிருக்கின்றது. இது கொண்டு, **கடம்பூர் மேற் காநாட்டுக் கடம்பூராக** இருக்கவேண்டுமென்று எண்ணி, அக் கோயிலிலுள்ள, **குலோத்துங்க** மன்னனது 49-ஆம் ஆண்டில் பொறிக்கப்பெற்ற மற்றொரு கல்வெட்டையும் படித்துப் பார்த்தேன். அதிலும் அவ்வூர் **மேக்காட்டுக் கடம்பூர்** என்றே குறிக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வாறு இருப்பது எழுத்துத் தச்சனால் நேர்ந்த பிழை என்று கொண்டால், **விருதராஜ பயங்கர வளநாடு, மேற் காநாடு** என்றும் **கீழ்க் காநாடு** என்றும் இரண்டு பகுதி பட்டதாதல் வேண்டுமென்று உய்த்துணரக்கிடக்கின்றது.

### கீழக் கடம்பூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுக்கள்.

கருப்ப இல்லின் மேல் புறத்தில் நடுமையத்திற்குத் தெற்குப் பகுதி:

1. ஆனை உரித்த தேவர்
2. தேவேந்திரன்

ஷை நடுமையத்திற்கு வடக்குப் பகுதி:

1. ஆனை உரித்த தேவர்
2. இலிங்கம புராண தேவர்
3. சந்திரசேகர தேவர்

கருப்ப இல்லின் வடபுறம்:

1. சந்தியா நிருத்த தேவர்
2. கால கால தேவர்
3. ரெகு சக்கரவர்த்தி

கருப்ப இல்லின் தென்புறம்:

1. உலகாண்ட மூர்த்தி
2. முருகாண்டார்
3. அர்த்த நாரீச தேவர்
4. திருக்குறிப்புத் தொண்டர்
5. தண்டிப் பெருமாள்

கருப்ப இல்லின் கீழ்ப்பக்கம் :

1. அறுவர் அமுதை ஆண்டார்
2. ஆனை யாண்டார்

## சில குறிப்புக்கள்.

கருப்ப இல்லைச் சுற்றிலும் மேற்கண்ட பெயர்கள் உள்ள படிமங்கள் வைக்கப்பட்டிருந்தன. இக்காலம் அவற்றுள் மிகச் சிலவே இருக்கின்றன. இக் கல்வெட்டின் எழுத்துக்கள் முதலாம் இராச ராச மன்னன் காலத்து எழுத்துக்களாக இருக்கின்றன. எனவே, இது மிகப் பழையதொரு சிவன் கோயில் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## சுவடி மதிப்பு

" திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ௩-ஆவது குரு மஹாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் அருளிச்செய்த பதி பசு பாசப் பனுவல், அளவை யட்டவணை, பதி பசு பாசத் தொகை " என்பவற்றைத் திருத் தென்குடித் திட்டை, சித்தாந்த வித்தியாசாலைத் தமிழாசிரியர், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இவை போன்ற வெளிவராத பிற நூல்களையும் அவர்கள் வெளியிட வேண்டியது இன்றியமையாதது.

ௐ ௐ ௐ ௐ

கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் " பழநி, இராஜகோபுர கும்பாபிஷேக நினைவுப் புதினம் " என்று பதிப்பித்துள்ள, " ஸ்ரீ தண்டாயுதபாணி பஞ்சரத்தினப் பதிகமும்—திருப்புகழும் " என்னும் சுவடி வரப்பெற்று யாம் மகிழ்ந்தோம்.

ௐ ௐ ௐ ௐ

தமிழ்க் கற்பிக்கும் முறை.—ஆசிரியர்: திரு. சி. இலக்குவனார், தமிழாசிரியர், நாட்டாண்மை உயர்தரக் கல்விக் கழகம், நன்னிலம். விலை எட்டணு.

இந்நூலைக் குறித்து நம் சங்கத் தலைவர் கொண்டுள்ள கருத்துக்களையே எம் மதிப்புரையாகக் கீழே தருகின்றோம்.

'இந் நூலாசிரியர் நுண்ணறிவும் தமிழ்ப் புலமையும் நிரம்பிய பெற்றியர்.

'தமிழாக்கங் கருதுவோர் நினைவில் வைத்துப் போற்றுதற் குரிய செயல்கள் பல இந்நூலில் விரித்துரைக்கப்படுகின்றன. தமிழ்க் கற்போர், தமிழ்க் கற்பிப்போர் ஆய இரு திறத்தினரின் பெற்றிமைகள், ஈதல் முறை, கட்டுரை இயற்றல், சொற்பொழி வாற்றல், பாடநூல் இயற்றல், இன்னோரன்ன செய்திகள் செவ்விதின் ஆய்ந்து தெளிக்கப்பெற் றுள்ளன.

'ஆசிரியர் தாம் ஆற்றிவரும் ஆசிரியத் துறையில் காணும் இடர்ப்பாடுகளைக் களையும் நோக்குடன் ஆழ்ந்து நினைந்து இயற்றிய நூலாகும் இது.

'தமிழார்வம் மிக்கு வளரும் இற்றை நாளில் வித்துவான் இலக்குவனார் இயற்றி உதவிய இந்நூல், புது எண்ணங்களைத் தோற்றுவிப்பதற் குரிய கருவியாகும்.

'தமிழன்பர்கள் இந்நூலை உளங்கொண்டு கற்கவேண்டும். ..........தமிழுலகம் இதனை ஆதரித்துப் போற்றுமென எண்ணு கின்றோம்.'

---

## இலங்கை, வீரகேசரி

தமிழ் நாட்டில், தமிழ் மொழியின் ஆக்கங் கருதியும், தமிழ் மக்களின் முன்னேற்றம் கருதியும் உழைத்து வரும் சங்கங் களில், தஞ்சாவூரி லுள்ள 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' தலை சிறந்த தொன்றாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்க் கொண் டாடப் பெற்ற இச்சங்கத்தின் வெள்ளி விழா, தமிழ் நாட்டில்

இதுவரையில் கூட்டப் பெற்ற கூட்டங்களி லெல்லாம் மேம்பாடுடைய தென்று கூறலாம். சங்கம் மேற்கொண்டுள்ள செயல்கள் பலவாக விருந்தாலும், தமிழ்ப் பயிற்சியைப் பரவச்செய்தலும், தமிழ் இலக்கிய, இலக்கண அறிவு நூல்களை வளயச் செய்தலுமே முதற் கடமையாகக் கொண்டு தொண்டாற்றி வருகிறது. இச் சங்கத்தின் உழைப்பின் பயனாகத், தமிழ் நாட்டில், பல தமிழுக்கு ஆக்கந்தரும் செயல்களும் கிளர்ச்சிகளும் தோன்றியுள்ளன. தூய தமிழிலேயே உலக வழக்கும் நூல் வழக்கும் நிகழ வேண்டுமென்பது இச் சங்கத்தின் நோக்கங்களில் முதன்மையானது. இந்நோக்கம் இப்போது தமிழகத்தில் பலராலும் தழுவப்பெற்று வருகிறது. ஏறக்குறைய முப்பது ஆண்டின் உழைப்பின் பயனாக, இச்சங்கம் 'தமிழ்ப் பொழில்' என்னும் ஒரு திங்கட் டாளையும், ஒரு புலவர் கல்லூரியையும், மருத்துவசாலையையும், ஐந்நூறு மாணவர்கள் பயிலும் ஒரு இளைஞர் பள்ளியையும், ஒரு திக்கற்ற மாணவரில்லத்தையும் தோற்றி நடத்தி வருகிறது. இச் சங்க வெள்ளி விழா வெளியீடு இதுகாறும் வந்துள்ள நினைவு மலர்களில் முதன்மையான தென்றே கூறலாம். தமிழகத்தி லுள்ள புலவர் பலரும் இச் சங்கத்தின் உறுப்பினராக அமர்ந்துள்ளார்கள். இச் சங்கப் புலவர்களும் உறுப்பினர்களும் தமிழ் நாட்டில் பல விடங்களிலும் சென்று, ஆரவார மின்றித், தமிழ் மொழியின் நலத்தையும் சுவையையும் தமிழ் மக்கள் பெறுமாறு செய்து வருகிறார்கள். இச் சங்க அமைச்சரும், உறுப்பினர் திரு. அ. கணபதி பிள்ளை யவர்களும் சில நாட்களாகக் கொழும்பில் தங்கிப், பல அறிஞரிடமும் தமிழ் ஆக்கங் கருதி உரையாடிவருகின்றார்கள். இலங்கையிலும் தமிழ் இலக்கிய உணர்ச்சி பெருக வேண்டுமென்ற நன் னோக்கத்துடனும் இவ் விடங்களி லுள்ள தமிழ் மொழி, தமிழ்க்கலை தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் வேண்டிச் சில நாட்கள் இங்கு தங்கியிருப்பார்கள்.

—வீரகேசரி, 28-8-40.

**தஞ்சைக்** கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளையும், மேற்படி சங்க வாணாள் உறுப்பினரும்,

திருக்கொள்ளம்பூதூர் திருப்பணியாளரும், பெருநிலக் கிழவரு மாகிய நச்சாந்துப்பட்டி திரு. பெ. ராம. ராம. சித. சிதம்பரஞ் செட்டியாரும் சில நாட்களாக, ரோசலே, உட்ஸ்டாக், ஹட்டன், நுவரெலியா, கம்பளே, கண்டி முதலிய பல இடங்களுக்குச் சென்று, அங்குள்ள தமிழ் மக்களைக் கண்டு நேரில் உரையாடி யும், தமிழ் இலக்கிய நலங்களைத் தமிழ் மக்கள் கைவிடாது போற்ற வேண்டுமென்பதை வற்புறுத்தியும், தமிழ் ஒரு மிக மிகப் பழைய மொழியாதலாலும், இலங்கையில் பல மக்களுக் குத் தாய்மொழியா யிருத்தலோடு, பலவகையால் தொடர் புடையதாதலாலும், தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத இலங்கையரும் தமிழ்மொழியின் அருமைகளைக் கண்டு மகிழச் செய்யவேண்டு மென்பது தமிழ் மக்களது கடமை யென்று கூறியும் வந்தார்கள். தாய் நாட்டை விட்டு வெளி நாடுகளில் வாழ்பவர்களுக்கு அவரவர்களது தாய்மொழியும் தாய்மொழி யின் இலக்கியமும் இன்றியமையாத கைப்பொருளாக இருக்க வேண்டுமென்பதையும் வற்புறுத்தினார்கள்; மேல்நாட்டார்கள் எங்கு சென்றாலும் தங்கள் தாய்மொழியை விடாது போற்றும் நற்குணத்தையும் எடுத்துக்காட்டி, அத்தகைய நற்குணங்கள் நம்மவர்களிடத்தும் அமையவேண்டுமென்பதையும் கூறினார்கள்.

சிங்களம், பாலி முதலிய மொழிகளுக்கும், தமிழுக்கும் நெருங்கிய தொடர்புடைமையால், இம்மொழி வல்லவர்கள் ஒன் றோடொன்றை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வார்களாயின், தமிழகத்துக்கும், இலங்கைத் தீவுக்கும் மிக நெருங்கிய அன் புணர்ச்சிஉண்டாகுமென்பதைப் பலரிடத்தும் தெரிவித்தார்கள்.

இவர்களோடு உடனிருந்து பல இடங்களுக்கும் அழைத் துச்சென்று, பலருக்கும் அறிமுகப்படுத்திய, இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. வ. ராம. இலச்சுமணச் செட்டியார் அவர்களது பேரன்பும் தமிழ்ப் பற்றும் மிகவும் பாராட்டத் தக்கது.

இக் கரந்தைத் தமிழ்ச் சங்க அன்பர்கள் இன்னும் சில இடங்களைப் பார்த்துக் கொண்டு அண்மையில் தஞ்சை செல் வார்கள்.

—வீரகேசரி, 2-9-40.

# காட்சி யளவை

திரு. த. இராமநாதபிள்ளை, பி.ஏ. (இலண்டன்), சுன்னாகம், இலங்கை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௪, பக்கம் 135.)

## 23. காட்சி யளவை. நியமங்கள்

ஆராய்ச்சி முறைகளின் நலத்தை ஆராயுமுன் காரண காரியத் தொடர்பு உண்டென்பதை நாட்டும் நியமங்களைத் தெரிந்து தெளியவேண்டும். பகுத்தறிவுள்ள மக்கள் யாவரும் தோற்றங்களைக் காலத்தானும் இடத்தானும் அளந்து அவற்றின் காரண காரியத் தொடர்பை உணர்கிறார்கள். தோற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் நிகழ்வன. அவற்றை நாம் விரும்பியவாறு தோற்றுவிக்க இயலாது. யாதோர் சுதந்தர காரணத்தினது ஆஞ்ஞைப்படியே தோற்றங்கள் காரண காரியத் தொடர்புடையவையாகத் தோன்றி நின் றழிகின்றன என்பது தத்துவ நூலார் கொள்கை. தருக்க நூலார் இத் தோற்றங்கள் ஒன்றன் பின் னொன்றாய் நிகழும் முறைகளைப்பற்றியே தேர்கின்றனர். ஒரு கல்லை எறிந்தால் அது கீழே விழுகின்றது. இத் தோற்றம் ஒரு இயற்கை விதியை உணர்த்துகின்றது. ஒரு தோற்றம் சொற்ப காலத்துக்கே நிலைத்து அழியுமாயினும், அதன் பயன் உலகம் முழுவதிலும் நெடுங் காலத்துக்கு நிகழும். உலகு தோன்றி நின் றழியும் தன்மைத்து என்பது உண்மை. இவ் வுண்மையை நிலைநாட்டுதற்கு மேனாட்டார் இரு நியமங்களைக் கூறுகின்றனர். அவை காரண நியமமும் காரிய நியமமும். இவ் விரு நியமங்களும் வேதனைக்காட்சி யாவற்றிற்கும் ஆதாரமானவை. இவ் விரு நியமங்களையும் நிரூபிக்க வியலாது.

## 24. காரண நியமம்

ஒவ்வொரு தோற்றமும் காரணமுடையது என்பது காரண நியமம். இவ்வுண்மை யாவர்க்கும் ஒப்ப முடிந்த தாகையால் உரையாக ஏற்கப்படும். அநுபவத்தை அளவை செய்யும் தத்துவங்கள் மூன்று. அவை காலம், இடம், காரண காரியத்

தொடர்பு என்பன. புறப்பொருட்களைக் காலத்தானும் இடத்தானும் ஏகதேசப் படுத்தியே வரையறுக்கிறோம். இங்ஙனம், புறப் பொருட்களின் காரண காரியத் தொடர்பை ஆராய்கிறோம். இவ்வுலகு காரண நியமத்திற்கு அமைந்திலதெனின், தோற்றங்களைத் தீய தேவதைகளாயினும் தூய தேவதைகளாயினும் தோற்றுவிக்க வேண்டுமெனப் பௌலர் மொழிகின்றனர். உலகில் ஒவ்வொரு பொருள்களும் தோற்றங்களும் தத்தம் முறை பிறழாமல் தோன்றுவதைக் காணலாம். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பொழுது முறையாகக் காலம் மாறுவதைக் காணலாம். வான்மீன்களும் முறை பிறழாமல் தம் பாதைகளிற் சுழல்கின்றன. திங்கள், புதன் முதலிய உருண்டைகளை அவற்றின் நிலைகளில் நிற்கச் செய்வது இந் நியமம். நியதி என்னும் தத்துவம் உண்டு. ஒவ்வொரு தோற்றமும் அலையின் பின் அலையாய் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஞாயிறு கிழக்கிலே உதிக்கவேண்டியதாகையால் அத் திக்கிலே உதிக்கின்றது.

உற்பத்திக் கால முதல் ஞாயிறு கிழக்கிலே உதிப்பதால், எதிர்காலத்தும் ஞாயிறு கிழக்கிலேயே உதிக்கவேண்டும். சிலர் ஞாயிறு எதிர்காலத்தும் கிழக்கிலேதான் தோற்றுமெனத் துணிய வியலாதென்பர். ஒரு பொருள் ஒரு இயல்புடையதாக இருத்தலால், அப்பொருள் அவ் வியல்புடையதாகவே இருத்தல் வேண்டும் எனச் செப்புதல் குற்றம். ஞாயிறு கிழக்கிலே உதிக்குமென்பது எமது நம்பிக்கையொழிய வேறொன்றுமல்ல. காரண நியமம் உண்டென்பது எமது நம்பிக்கை. காரணத்தை ஆராய்ந்து பழகினோமாகையால், எல்லாத் தோற்றங்களுக்கும் காரணம் உண்டு என நினைக்கிறோம். இங்ஙனம் காரணம் உண்டென்பது ஒரு நம்பிக்கை யொழியப் பிரமாண மாகாதெனச் சிலர் கூறுகின்றனர்.

## 25. காரிய நியமம்.

ஒரு காரியம் ஒரு காரணத்தையே உடையதென்பது காரிய நியமம். குறித்ததோர் காரணம் குறித்ததோர் காரியத்தையே நிகழ்த்தும். காரணமும் காரியமும் நீக்கமின்றி நிற்கும் தொடர்

புடையன. இந் நியமம் உண்மை. காரண காரியத் தொடர்பு இன்றெனின், உலகத்துத் தோற்றங்கள் முறை யின்றித் தோற்ற வேண்டும். காரண மின்றிக் காரிய முண்டெனின், முயலின் சென்னியிற் கோடும், வானின்று மண் மாரியும், கூவ லின்றி நீரும் எனப் பல காரியங்கள் நிகழவேண்டும். ஒரு போதும் இவை நிகழக் காணாமையான், காரண காரிய நியமம் உண்டென்பது கருதப்படும். மக்கள் யாவரும் காரண காரிய நியமம் உண்டென நம்பியே வாழுகின்றனர். இந் நியமத்தில் நம்பியே இயற்கை யாராய்ச்சி நூலோர் இயற்கைப் பொருட்களின் றொடர்புகளை ஆராய்கின்றனர். வாழ்க்கையிலும் ஒவ்வொருவரும் இந் நியமத்துக் கமைந்தே ஒழுகுகின்றனர்.

## 26. கருத்தா.

தருக்க நூல் முதற்காரணத்தைப்பற்றியே ஆராய்கின்றது. நிமித்த காரணம் உண்டோ இல்லையோ என்பதை நிச்சயிப்பது தத்துவநூல். முதற் காரணத்துக்கும் நிமித்த காரணத்துக்கும் உள்ள வேற்றுமையை அறிதல் அவசியம். குடம் தோற்றுதற்கு குயவன் இயற்றுதற் கருத்தா வாதலால், குயவனை நிமித்த காரண மென்போம். குடத்தை வனையென ஒருவன் ஏவினுனயின், ஏவுதற் கருத்தாவை நிமித்த காரணமென்போம். குடத்தை வனைவோன் தண்ட சக்கரத்தின் துணையை வேண்டி நிற்பதால், தண்ட சக்கரத்தைத் துணைக் காரண மென்போம். மண்ணின்றிக் குடத்தை ஆக்க வியலா தாகலான், மண்ணை முதற் காரணம் என்போம். மண்ணே குடமாகப் பரிணமிக்கின்றது. ஒரு பொருள் பிறிதொன்றாக மாறுத லடையும் முறைகளையே இயற்கை யாராய்ச்சி நூலோர் மொழிகின்றனர். பரம முதற் காரணமாகிய மாயையின் இலக்கணம் இயற்கை யாராய்ச்சி நூல்களில் ஆராயப்படுகிறது. பூதப் பொருட்களின் மாற்றங்களை ஆராயும் முறைகளின் நலத்தைத் தருக்க நூலாராய்கின்றது.

(தொடரும்.)

# பழநி ஊர்க்கோயில் குடமுழுக்கு

நாளது விக்கிரம, ஆவணி, உஉ (6-9-40), வெள்ளிக்கிழமை, பழநி நகரில் திருக்கோயில் கொண்டிருக்கும் பெரியநாயகி யம்மை பாகத்துக் கைலாசநாதருக்கும், சுப்பிரமணிய ச்சாமி முதலான சுற்றுச்சாமிகட்கும், திரளான அடியார்கள் கண்டு வணங்கிக் களிக்க, ஆகம முறைப்படி, எண்புறக்கட்டுக் குடமுழுக்கு இனிது நிறைவேறியது.

இதற்குமுன் எப்பொழுது இவ்வகைக் குடமுழுக்கு நிகழ்ந்ததென் றறியலாகாத பழமையுள்ளதாய்ச், சிதைவுற் றிருந்த பகுதிகளைப் பழுதுபார்த்தும், திருக்கோபுரங்களைப் புதுப்பித்துச் சித்திரித்தும், புதிய பொற் கலசங்க ளமைத்தும், பழநி ஆண்டவன் கோயிற் குடமுழுக்கை யடுத்து, ஆண்டவன் திருவருளால், இந்தக் குடமுழுக்கும் நிகழ, விரைந்து பணி யாற்றிய, பழநித் திருக்கோயிற் செயலாளர் திருவாளர் ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்களது அன்பு, ஊக்கம், வினைசெயற் றிறம் முதலிய பெரிதும் பாராட்டத் தக்கன வாகும்.

இக் குடமுழுக்கு நாளிலும் அதற்கு முன் பின் நாட்களி லும் பஞ்சாக்கரபுரம் உயர்திரு. வாலையானந்த அடிகள் என்ற சச்சிதாநந்த அடிகள் அவர்களாலும், தஞ்சைச் சைவத் திருவாளர் மு. சாமி. சிவராமபிள்ளை அவர்களாலும் அரிய சொற்பொழிவு கள் நிகழ்ந்தன. ஆண்டுக் குழுமி யிருந்த சைவப் பெருமக்கள் விரிவுரைகளைச் செவிமடுத்துச், சைவநெறியின் உண்மைகளை யுணர்ந்து, இன்புற்று, நற்பயன் பெற்றார்கள்.

S. அளகிரிசாமிசெட்டி, பழநி.

# கரந்தைத் தமிழ்ச் சங்கம்

## நன்கொடைகள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| வித்துவான் திரு. வி. சிவக்கொழுந்து உசிலம்பட்டி, தமது திருமணம். | அவர்கள் | 2 | 0 | 0 |
| திரு. க. கிருட்டினசாமி பிள்ளை ஆலங்குடி, தம் தம்பி மகன் திருமணம். | ,, | 10 | 0 | 0 |
| ,, மா. சாமியப்பா பிள்ளை குளமங்கலம், தம் பேர்த்தி திருமணம். | ,, | 3 | 0 | 0 |

திரு. ச. காமேசுவரன், திரு. சா. கஜேந்திரன் வழி :

மாணவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ,, சி. இளந்தூயமணி | அவர்கள் | 1 | 0 | 0 |
| ,, சு. முருகன், பி. ஏ., | ,, | 1 | 0 | 0 |
| ,, க. சிவராமகிருட்டினன் | ,, | 1 | 0 | 0 |
| ,, பா. ச. சுந்தரம் | ,, | 1 | 0 | 0 |
| ,, சோ. அ. இராமச்சந்திரன் | ,, | 1 | 0 | 0 |
| ,, கி. சட்டைநாதன் | ,, | 1 | 0 | 0 |
| ,, எ. தானியல் (சென்னை) | ,, | 1 | 0 | 0 |
| ,, மா. துரைசாமி (திருப்புத்தூர்) | ,, | 1 | 0 | 0 |
| ,, ச. காமேசுவரன் | ,, | 1 | 0 | 0 |
| ,, சா. கஜேந்திரன் | ,, | 1 | 0 | 0 |

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

தமிழ்ப்பொழில் சேர்க்கை.


... SARASWATI MAHAL ...
RECEIVED
27 OCT 194.
TANJORE


மேன்மை தங்கிய கவர்னரவர்களின்

## யுத்த நிதி

தஞ்சை ஜில்லா

# அதிர்ஷ்ட பரிசுச்சீட்டு

## 8—12—40ல்

தஞ்சைக் கலெக்டர் ஆபிசில்
நடைபெறும்.

டிக்கட் ஒன்று எட்டணு

மொத்தம் 2000 பரிசுகள்

பரிசுகள் விபரம்.

புதிய மோட்டார் கார், புதிய ரேடியோ,
வகையராக்கள்.

விவரங்கள் டிக்கட்டின் பின்புறம் காண்க.

டிக்கட்டுகள் டிஸ்டிரிக்ட், டிவிஷனல்,
யுத்தக் கமிட்டிகளில் கிடைக்கும்.

பிரசிடேண்ட், ரேபிள் கமிட்டி.